அனுப்புநர்                                        பெறுநர்

திருமதி.சு.நாகரத்தினம்,
மாண்புமிகு மேயர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001

**<u>ந.க.எண்.சி3/2022                    நாள் 29.07.2022</u>**

அய்யா/அம்மையீர்,

பொருள்– ஈரோடு மாமன்றம் – 29.07.2022ஆம் தேதி மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற அவசர கூட்டநடவடிக்கைகள் – மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை– 29.07.2022ஆம் தேதிய அவசர கூட்ட நடவடிக்கைகள்.

////

ஈரோடு மாமன்றத்தின் 2022–ஆம் ஆண்டு ஜீலை மாதம் 29–ஆம் தேதி (29.07.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் இத்துடன் தங்களுக்கு இணைத்து அனுப்பப்படுகிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர்,
ஈரோடு மாநகராட்சி.

இணைப்பு– கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்ட நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3–ற்குட்பட்ட வார்டு எண்.10, 19, 30, 31, 32, 33, 34 44, 45, 46, 47, 48, 49, 50, 51 ஆகிய 15 வார்டுகளில் குடிநீர் குழாய் திறப்பு பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போதும் குடிநீர் குழாய் திறப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9887/2020/எ2, நாள்.10.10.2020ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பார்வை–3ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி குடிநீர் குழாய் திறக்கும் பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.676/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.07.2022 முதல் 30.09.2022 முடிய 3 மாத காலத்திற்கு 89 நாட்களுக்கு சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளவும், EPF பணியாளர்களிடம் 12% பிடித்தம் செய்யப்படும் தொகையுடன் நிர்வாகப்பங்கு தொகை 13% ஆகியவற்றை EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும் அதற்காகும் செலவினம் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1 | குடிநீர் குழாய் திறப்பு பணியாளர்கள் (WS) | 46 | 46 |

| | | | |
|---|---|---|---|
| 1 | குடிநீர் குழாய் திறப்பு பணியாளர்கள் (WS) | 46 X 89 X 676 | **2767544/–** |

**குடிநீர் குழாய் திறப்பு பணியாளர்கள் (WS)**

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திருகைலாசநாதர் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 | 676 | 89 | **721968** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | அன்னை ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 3 | வசந்தம் ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 4 | மருதம் ஆடவர் சுயஉதவிக்குழு | 8 | 676 | 89 | **481312** |
| | **மொத்தம்** | 46 | 2704 | 356 | **2767544** |

**அலுவலகக் குறிப்பு–**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் உத்தரவு ந.க.எண்.9887/2020/எ2 நாள்.10.10.2020–ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர்–2022 ஆகிய மூன்று மாதத்திற்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**இ2/2630/2019–ம3**

**85. அனுமதி வழங்கப்பட்டது.**

**2.** தி ஹிந்து குழுமம் பத்திரிக்கைத் துறையில் 143-வது ஆண்டாக தொடர்வதை கொண்டாடும் விதமாக "Read and Rise" எனும் நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இந்நிகழ்ச்சி மூலம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் உயர்கல்விக்கான பொது அறிவு நூல்களை ஒரு கட்டில் 20 புத்தகம் வீதம் 20 கட்டுகளை நன்கொடையாக வழங்குவதாகவும் மேற்படி புத்தகங்களுக்கு லாப நோக்கமின்றி சிறப்பு விலையாக ஒரு கட்டு Bundle ரூ.2,513/- வீதம் 20 கட்டுகள் (20 Bundles) ரூ.50,225/-க்கு வழங்குவதாகத் தெரிவித்து மேலாளர், THE HINDU, SALEM நிறுவனத்தின் 14.06.2022-ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்டவாறு இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்விக்கான பொது அறிவு நூல்களை (20 நூல்கள் ஒரு கட்டு வீதம்) 20 கட்டுகளை (Bundle) கல்வி நிதியிலிருந்து ரூ.50,225/-ஐ செலுத்தி THE HINDU நிறுவனத்திடமிருந்து வாங்கவும் பின்னர் அவைகளை இம்மாநகராட்சிக்கு சொந்தமான 20 பள்ளிகளுக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மாநகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்படி செலவினம் ரூ.50,225/-ஐ மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/2630/2019–ம3**

**86. அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் சமூக நலத்துறையின் மான்யக் கோரிக்கையின் போது கீழ்கண்ட சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

*"அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும், மேலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். நகரப் பகுதிகளிலும் மற்றும் கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்கு செல்லக் கூடிய குழந்தைகள் காலையிலையே புறப்பட்டு விடுகிறார்கள். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. பள்ளிகள் மிக*

*தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்ப சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதனை மனதில் வைத்துக் கொண்டு இத்திட்டத்தை நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூர கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. இதனை உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக வழங்குவோம், படிப்படியாக அனைத்து பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்".*

அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்.சி.ஏ-2, நாள்: 14.07.2022-ல் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் முதற்கட்டமாக செயல்படுத்த ஏதுவாக ஒருங்கிணைந்த சமையல் கூடங்களுக்காக கண்டறியப்பட்ட கட்டடம் அல்லது காலி இடம் ஒவ்வொன்றும் குறைந்தது 1000 குழந்தைகளுக்கு சமைக்கும் விதத்தில், வசதிகளை ஏற்படுத்திட குறைந்த பட்சம் 1000 சதுரஅடியிலிருந்து 1500 சதுரஅடி இருக்குமாறு தேர்வு செய்யப்பட வேண்டும். மேலும் பழைய கட்டடத்தையே சமையற் கூடமாக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்தால் உடனடியாக சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி தயாரிக்கும் ஒருங்கிணைந்த சமையற்கூடம் (Centralized Community Kitchen) கட்டுவதற்கு காமராஜ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வு செய்யப்பட்டு அங்கு புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு.

| S. No | Name of Work | Estimate Amount (Rs.in Lakh) |
|---|---|---|
| 1. | Renovation of Existing Building and additional construction for Centralized Community Kitchen in Kamaraj Corporation Boys Higher Secondary School in Erode City Municipal Corporation. | 15.00 |

மேற்கண்டவாறு ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டும் பணியை ரூ.15.00 இலட்சம் மதிப்பில் மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் பின்னர் அரசு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால் அதை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டமாக உள்ளதால் இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டு மேற்படி பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியத்தைக் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். சி6/4674/2022**

**87. ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-II-க்குட்பட்ட புதிய வார்டு எண்: 9, பெரியசேமூர் கிராமம், ரீ.ச.எண்: 420, 421/2, 430/3-இல் 1. திரு.ந.கோபிநாத், 2. திரு.எஸ்.சின்னசாமி, 3.திரு.சி.செல்வராஜ், 4.திருமதி.எம்.ராஜேஸ்வரி, 5. திரு.எஸ்.மாதேஸ்வரன், 6.திரு.எ.ராஜு ஆகிய 6 நபர்களும் அவர்களுக்கு சொந்தமான பூமிகளிலிருந்து அடுக்குப்பாறை பகுதிக்கு வடிகால் அமைப்பதற்காக 237.2 மீட்டர் நீளமும், 1.21 மீட்டர் அகலமுடைய 3089 சதுர அடிகள் கொண்ட இடத்தினை ஈரோடு மாநகராட்சிக்கு கட்டணம் ஏதுமின்றி தானமாக ஒப்படைப்பு செய்கின்றனர். மேற்படி கழிவுநீர் கால்வாய் அமைக்க தானமாக ஒப்படைக்கும் இடத்திற்கு தென்புறமாக ரீ.ச.எண்: 430/2,3(உட்பிரிவின்படி ரீ.ச.எண்: 430/2A,2B)-இல் திரு.ந.கோபிநாத் மற்றும் திரு.எஸ்.சின்னசாமி ஆகியோருக்கு சொந்தமான பூமி அமைந்துள்ளது.

மேற்படி பூமியிலிருந்து ஈகிள் கார்டன் என்ற அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு சாலை வரை பொதுமக்களின் நலன் கருதி, பொது போக்குவரத்து வசதிக்காக வடபுறம் கிழமேல்

அடி 30 அடி அகலமும், தென்புறம் கிழமேல் அடி 30 அடி அகலமும், கிழபுறம் தென்வடலடி 438 ¾ அடி நீளமும், மேல்புறம் தென்வடலடி 428 ¾ அடி நீளமும் கொண்ட இந்த வகை அளவுள்ள 12830 ½ சதுர அடிகள் கொண்ட தென்வடல் சாலை மற்றும் வடபுறம் கிழமேல் அடி 79 ½ அடி நீளமும், தென்புறம் கிழமேலடி 72 ¼ அடி நீளமும், கிழபுறம் தென்வடலடி 30 அடி அகலமும், மேல்புறம் தென்வடலடி 33 அடி அகலமும் கொண்ட இந்தவகை அளவுள்ள 2259 ½ சதுர அடிகள் கொண்ட கிழமேல் சாலை ஆகியவற்றை ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க முன்வந்துள்ளனர். பொதுமக்களின் நலன் கருதி மேற்படி தானமாக ஒப்படைக்க உள்ள சாலையினை தரமான தார்சாலையாகவும், சாலையின் இருபுறமும் எளிதாக மழைநீர் வெளியேறும் வண்ணம் வடிகால்கள், பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவற்றை அவர்களது சொந்த செலவில் அமைத்துத் தரும் பட்சத்தில் மேற்படி சாலையினை ஈரோடு மாநகராட்சி வசம் ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது மக்களின் போக்குவரத்து நலன் கருதியும், மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவிலேயே அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதையும் கருத்தில் கொண்டு மேற்படி சாலையினை மாநகராட்சி தானக்கிரயம் செய்து கொடுப்பதை அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: இ1/1123/2022**

**88. அனுமதி வழுங்கப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-II-க்குட்பட்ட புதிய வார்டு எண்: 9, பெரியசேமூர் கிராமம், ரீ.ச.எண்: 420, 421/2, 430/3-இல் 1. திரு.ந.கோபிநாத், 2. திரு.எஸ்.சின்னசாமி, 3.திரு.சி.செல்வராஜ், 4.திருமதி.எம்.ராஜேஸ்வரி, 5. திரு.எஸ்.மாதேஸ்வரன், 6.திரு.எ.ராஜு ஆகியோர்களுக்கு சொந்தமான பூமி உள்ளது. மேற்படி பூமிக்கு அருகே அடுக்குப்பாறை, குபேரன் நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளில் சுமார் 200-க்கும் மேற்பட்ட குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். மேலும் இப்பகுதியில் தொழிலாளர்கள் அதிக அளவில் குடியிருந்து வருகின்றனர். மேற்படி பகுதியில் உருவாகும் கழிவுநீர் வெளியேற மாநகராட்சிக்கு

சொந்தமான இடம் ஏதும் இல்லை. மேற்படி பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் செல்வதற்கும், அக்கழிவுநீரானது மேற்படி 6 நபர்களுக்கும் சொந்தமான பூமிக்கும் மேற்கே அமைந்துள்ள நிலவியல் மழைநீர் கால்வாயில் சென்று எளிதாக வெளியேறும் பொருட்டும், பொது மக்களின் நலன் கருதியும் வடிகால் அமைக்க ஈரோடு மாநகராட்சிக்கு இடம் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் 6 நபர்களும் அவர்களுக்கு சொந்தமான பூமிகளிலிருந்து வடிகால் அமைப்பதற்கு 237.2 மீட்டர் நீளமும், 1.21 மீட்டர் அகலமும் கொண்ட 3089 சதுர அடிகள் (287 சதுர மீட்டர்கள்) கொண்ட இடத்தினை ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய முன்வந்துள்ளனர். எனவே மேற்படி இடத்தினை பொதுமக்களின் நலன் கருதி ஈரோடு மாநகராட்சி வசம் தானக்கிரயம் மூலம் ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

அப்பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்றும், பொது மக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் மாநகராட்சிக்கு தானக்கிரயம் செய்து கொடுப்பதை அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: இ1/1124/2022**

**89. அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (smart city Mission 2020-21) Construction of Additional Parking facilities and Minibus Busshelter in Erode Bus Terminal in Erode Smart City பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.50 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை-5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.19884/2018/IHSDP-3-2 நாள்: 14.08.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கியது தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5876/2020/DO1 நாள்.06.10.2020-ல் மேற்படி பணிக்கு ரூ.550.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு

ஒப்பந்ததாரர் M/s. Thanya Projects, Erode, ஈரோடு அவர்களின் 4.95% சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஈரோட்டில் கூடுதலாக இரண்டு புறநகர் பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும் என அறிவித்தற்கிணங்க அதனையொட்டி தற்போது உள்ள ஈரோடு மத்திய பேருந்து நிலையத்தை மாண்புமிகு வீட்டு வசதி வாரிய துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேராய்வு செய்யப்பட்டது. தற்போது உள்ள பேருந்து நிலையத்தை முழுவதுமாக நகரப் பேருந்து நிலையமாக மாற்றவும் பேருந்து நிலைய வளாகத்தில் அமையவுள்ள வணிக வளாக கட்டிடத்தை வெளிப்புற பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் சத்தி ரோடு சாலையையொட்டி அமைக்கவும், நகர பேருந்துகள் பொதுமக்களுக்கு ஏற்ற வகையில் எளிதாக எந்தவித தங்கு தடையுமின்றி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் வகையில் சில மாற்றங்கள் செய்து கட்டுமான பணிகள் செய்ய அறிவுரை வழங்கியதற்கேற்ப மேற்படி ஈரோடு பஸ்நிலைத்தில் Smart City திட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகளில் சில மாறுதல்கள் செய்து கட்டுமான பணிகள் செய்யப்படவேண்டியுள்ளது.

அதனை தொடர்ந்து இப்படி துவங்கி நடைபெறும் பொழுது திட்டப்பணிகள் பார்வையிட வந்த திண்டுக்கல், அண்ணா பல்கலைகழகம், மூன்றாம் நபர் தொழிநுட்ப வல்லுநர் அவர்கள் இப்பகுதியில் உள்ள மண்ணின் தன்மைக்கேற்பவும், பூமிகடியில் அமையவுள்ள இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தின் மீது கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகள் செல்ல இருப்பதால் இக்கட்டிடம் அமையவுள்ள பகுதி, நிலநடுக்க மண்டலம் ஆகியவற்றை கணக்கில் எடுத்து கொண்டு மண்ணின் தன்மைகேற்ப தாங்கும் தூண்களின் அஸ்திவார பகுதியை (Raft Slab) மதிப்பீட்டில் உள்ள அளவுகளை விட கூடுலாக கனம் அமைக்கவும் தாங்கு தூண்கள், உத்திரம் (beam) ஆகியவற்றிகான இரும்பு கம்பிகளின் அளவுகள் மற்றும் அதன் அளவுகள் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள கட்டமைப்பு வடிவமைப்பில் உள்ளதை விட கூடுதலாக அமைக்கும்

வகையில் திருத்திய கட்டமைப்பு வடிவமைப்பு தயார் செய்து அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்

இதன் அடிப்படையில் மத்திய பேருந்து நிலையத்தில் கூடுதல் வாகனம் நிறுத்தும் இடம் கட்டுமான பணிகள் துவங்கி நடைபெற்று வருகிறது. மேலும், இப்பணிக்களத்தின் தன்மைக்கேற்ப தேவையான புதிய இனங்கள் மேற்கொள்ளவும் மற்றும் ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட இனங்களில் கூடுதலாகவும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு தொழில் நுட்ப குழுவில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களால் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட மதிப்பீட்டைவிட கூடுதல் அளவுகள் மற்றும் புதிய இனங்கள் மேற்கொள்ளப்பட, தயார் செய்யப்பட்ட பணித்தாள் (Work slip) மற்றும் துணைப்பட்டியல் (Supplementary data) ஈரோடு மாநகராட்சி தொழில்நுட்ப (Technical Committee) கூர்ந்தாய்வு செய்து கருத்துரு அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, தலைமை பொறியர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் அனுமதி வேண்டி கருத்தரு அனுப்ப, மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:இ1/444/2018**

**90. அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1ல் வார்டு எண். 1 முதல் 4,6,7,13,14,15, 16,17,23,24,25,26ஆகிய 15 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள், கோவிட் கட்டுப்பாட்டு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போதும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கோவிட் கட்டுப்பாட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கும்,

தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9887/2020/எ2, நாள்.10/10/2020ன்படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின்படி கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் பணிக்கு (DBC) நாள் ஒன்றுக்கு ரூ.510/-. தூய்மைப் (Other Unskilled Menial) பணிக்கு (SWM) நாள் ஒன்றுக்கு ரூ.676/- மற்றும் (Semi-Skilled Labourers) ஓட்டுநர் (Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.714/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2022 முதல் 30.06.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 01.07.2022 முதல் 30.09.2022 முடிய 3 மாத காலத்திற்கு 89 நாட்களுக்கு இந்த சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி, கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1. | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 75 | 75 |
| 2 | துப்புரவுப் பணியாளர்கள் (SWM) | 141 | 141 |
| 3. | ஓட்டுநர்கள் (Drivers) | 45 | 45 |

| | | | |
|---|---|---|---|
| 1 | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 75 x 89 x 510 | 3404250/-+442551 |
| 2 | துப்புரவுப் பணியாளர்கள் (SWM) | 141 x 89 x 676 | 8483124/-+1102806 |
| 3 | ஓட்டுநர்கள் (Drivers) | 45 x 89x 714 | 2859570+371745 |
| | | | 4746944+1917102=1664046/– |

கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC)

| வ. எண். | சுயஉதவிக்குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 12% ரூ. | EPF 13% ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஓம் சக்தி சுயஉதவிக்குழு | 13 | 510 | 89 | 590070 | 70808 | 76709 |
| 2 | ஸ்ரீ மாயவன் சுயஉதவிக்குழு | 12 | 510 | 89 | 544680 | 65362 | 70808 |
| 3 | தாய்சேய் சுயஉதவிக்குழு | 12 | 510 | 89 | 544680 | 65362 | 70808 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | ஸ்ரீ ஜெய் சக்தி உதவிக்குழு | 13 | 510 | 89 | 590070 | 70808 | 76709 |
| 5 | அப்துல் கலாம் சுயஉதவிக்குழு | 12 | 510 | 89 | 544680 | 65362 | 70808 |
| 6 | ஸ்ரீ சிவசக்தி சுயஉதவிக்குழு | 13 | 510 | 89 | 590070 | 70808 | 76709 |
| | மொத்தம் | 75 | | | 3404250 | 408510 | 442551 |

தூய்மைப் பணியாளர்கள் (SWM)

| வ. எண். | சுயஉதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 12% ரூ. | EPF 13% ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பண்ணாரி அம்மன் சுய உதவி குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 2 | அம்பேத்கார் சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 3 | ஸ்ரீ சமயபுரத்து மாரியம்மன் சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 4 | ஸ்ரீ குறிஞ்சி மலர் சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 5 | ஸ்ரீ விநாயகம் சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 6 | பாபா சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 7 | ஸ்ரீ சக்தி சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 8 | ஸ்ரீ ஐயப்பன் ஆடவர் சுய உதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 9 | ஸ்ரீ அம்மன் சுபமதி மகளிர் சுய | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உதவிக்குழு | | | | | | |
| 10 | ஸ்ரீ வாரி சுயஉதவிக்குழு | 13 | 676/- | 89 | 782132 | 93856 | 101677 |
| 11 | மகாத்மா காந்தி சுய உதவிக்குழு | 11 | 676/- | 89 | 661804 | 79416 | 86035 |
| | மொத்தம் | 141 | | | 8483124 | 1017975 | 1102806 |

ஓட்டுநர்கள் (SWM Vehicles)

| வ. எண். | சுயஉதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. | EPF 12% ரூ. | EPF 13% ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ திருப்பதி சுய உதவிக்குழு | 15 | 714/- | 89 | 953190 | 114383 | 123915 |
| 2 | ஸ்ரீ ஏழுமலையான் சுய உதவிக்குழு | 15 | 714/- | 89 | 953190 | 114383 | 123915 |
| 3 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுய உதவிக்குழு | 15 | 714/- | 89 | 953190 | 114383 | 123915 |
| | மொத்தம் | 45 | | | 2859570 | 343149 | 371745 |

மேற்படி பணியாளர்களின் மாதம் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் 12% EPF மற்றும் மாநகராட்சி பங்குத் தொகை மற்றும் நிர்வாகச் செலவினம் 12+1=13%ம் சேர்த்து EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும், அதற்கான செலவினம் ரூ.1,70,00,000/-க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவகக்குறிப்பு:

1. அனுமதி வழங்கலாம்.
2. மாமன்ற மேயரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்: எச்1/791/2022**

**91. அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** அரசாணை (டி) எண்.688, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் (எல்2) துறை, நாள்.27.06.2022ல் டாக்டர்.வெ.பிரகாஷ் அவர்களை துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து (Category 2C) (Grade-II) ஆக பதவி உயர்வு செய்தும், ஈரோடு மாநகராட்சியில் காலியாக உள்ள மாநகர நல அலுவலர் பணியிடத்தில் அயற்பணி அடிப்படையில் மாநகர நல அலுவலராக அடிப்படை விதிகள் 110-114 Foreign Service Terms and Condition-ன்படி பணிபுரியவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். சி1/4349/2022**

**92. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்காக டிராக்டர், டிரெய்லர்–1, (வண்டி எண்.TN33BF0029) இயக்குவதற்கு ஓட்டுநர் பணியிடம் தேவைப்படுகிறது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தைக் கருதி 01.07.2022ம் தேதி முதல் சுயஉதவிக்குழு மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளவும், மேற்படி சுயஉதவிக்குழு பணியாளரை மகாத்மாகாந்தி பொது சுகாதாரப் பிரிவு ஆடவர் சுயஉதவிக்குழுவில் சேர்த்துக்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று சுயஉதவிக்குழு மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க. எண். இ2/2633/2019-ம3**

**93. அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4–ற்குட்பட்ட வார்டு எண்.38, 39, 40, 41, 42, 43, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 ஆகிய 15 வார்டுகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் திறப்பாளர், மேல்நிலைத்தொட்டி இரவு காவலர் மற்றும் மேல்நிலை தொட்டிகளை சுத்தம் செய்யும் பணிகளை செய்ய பணியாளர்கள் ஒதுக்கீடு ஏதும் இல்லாத காரணத்தினால் மண்டலம் – 4 க்குட்பட்ட 15 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்ய ஆடவர் சுய உதவிக்குழு மூலம் 18 பணியாளர்களை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ள துளசி சுயஉதவிக்குழு மூலம் 18 பணியாளர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும் ஜூலை 2022 முதல் செப்டம்பர் 2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஊதியம் மற்றும் E.P.F நிர்வாக பங்குத்தொகை 13% ம் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.14.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். இ2/0096/2022-ம4**

**94. அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4-க்குட்பட்ட வார்டு எண்.56-ல் உள்ள ரெயின்போ கார்டன் மற்றும் திருப்பதி கார்டன் பகுதிகளில் மழைக்காலங்களில் அதிகளவு தண்ணீர் தேங்குவதால் முறையான வடிகால் மற்றும் சாலை வசதி மேற்கொள்ள போதிய இடம் இல்லாத காரணத்தால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி 1.திரு.ஆர்.முத்துசாமி (லேட்) அவர்கள் குமாரர்

திரு.எம்.ஈஸ்வரமூர்த்தி , க.எண்.24 ரகுபதிநாயக்கன்பாளையம் ஜீவானந்தம் வீதி ஈரோடு-2, 2. திரு.எம்.சுப்பிரமணியன் அவர்கள் மனைவியும், (லேட்) ஆர்.முத்துசாமி அவர்கள் குமாரத்தியுமான திருமதி.எஸ்.சிவகாமி க.எண்.13/25 N.G.G.O காலனி மெயின்வீதி, ஈரோடு என்பவர் ஈரோடு "இ" கிராமம் ரீ.சர்வே எண்.1031/2ஏ அயிட்டம் -1 நீளம் 7.00 மீ (23') அகலம் 7.00 மீ (23') கொண்ட சாலை 23'x 23'=1300 சதுரடிகள் அயிட்டம் - 2 நீளம் 22.5 (74') 20.8 மீ (67.8") அகலம் 9.10 மீ (30') கொண்ட சாலை 74'x30'=2115 சதுரடிகள் கொண்ட சாலையும், ஆக மேற்சொன்ன இரண்டு அயிட்டங்களிலும் கூடிய 3415 சதுடிகள் (317.38 சதுர மீட்டர்கள்) உள்ள சாலையினை பொதுமக்களின் உபயோகத்திற்கு பயன்படுத்தி கொள்ள தானமாக வழங்க முன்வந்துள்ளனர்.

எனவே தானமாக வழங்கும் இச்சாலை ரகுபதிநாயக்கன்பாளையம் மற்றும் பெரியசடையம் பாளையம் கக்கன்ஜி நகர் பகுதிகளுக்கு இச்சாலை இணைப்பு சாலையாகவும் மற்றும் மழைநீர் தேங்காவண்ணம் செல்ல வடிகால் அமைக்கவும் பயன்படுத்திகொள்ளலாம். எனவே, மெயின்சாலையில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும் பொது மக்களின் நலன் கருதி சாலையை மாநகராட்சி எடுத்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி சாலையை தானமாக பெறுவதால் இச்சாலை இணைப்பு சாலையாகவும், மழைநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகால் அமைத்துக்கொள்ளவும் பயன்படும் . எனவே பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, மாண்புமிகு மேயர் அவாகளின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண். 749/2022/இ1-ம4**

**95. அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** தேசிய நகர்ப்புற இயக்கம் (National Health Mission 2021-2022) திட்டத்தின் கீழ் 453 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் (U-HWCS) மற்றும் 22 மாநகர பொது சுகாதார ஆய்வகங்கள் (CPHC) அமைக்க 15-வது நிதிக்குழு ஆணையம் பரிந்துரைக்கப்பட்டதை தொடர்ந்து, ஈரோடு மாநகராட்சியில் 20 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் (U-HWCS) மற்றும் 2 மாநகர பொது சுகாதார ஆய்வகங்கள் (CPHC) அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்: 32454/2021/AMRUT-2 நாள்: 17.12.2021-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-II-க்குட்பட்ட பழைய நேதாஜி மார்க்கெட் வளாகத்தில் நகர்ப்புற நல்வாழ்வு மையக் கட்டடம் அமைக்கும் பணியை ரூ.25.00/- லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் தீர்மானம் எண்:296 நாள்:22.12.2021-ன்படி அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு மாநகரப் பொறியாளர், ஈரோடு மாநகராட்சி அவர்களின் மதிப்பீட்டு எண்: 231/2021-2022 நாள்: 03.01.2022-ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் திருவாளர்.பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தாருக்கு பணி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. மேற்படி பணியை மேற்கொள்ள நேதாஜி மார்க்கெட் வளாகத்தில் மாநகரப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களால் தள ஆய்வு செய்த போது அவ்விடத்தில் அஸ்திவாரம் (foundation) தொழில்நுட்ப ரீதியாக அமைப்பதற்கு மண் ஏற்படையதாக இல்லாததாலும் 15 அடி வரை ஸ்தர தன்மை கிடைக்காததாலும் Pile foundation அமைத்து மேற்படி பணியை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. இதனால் மேற்படி பணி செய்ய ரூ.2.00/- லட்சம் கூடுதலாக செலவு ஏற்படும். எனவே இத்தொகையினை இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் செய்யவும், மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்திற்கு நிர்வாக அனுமதியும், மேலும் இப்பணியை செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அதே மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.இ1/1088/2022**

**96. அனுமதி வழங்கப்பட்டது.**

**13.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4–ற்குட்பட்ட வார்டு எண்.38, 39, 40, 41, 42, 43, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60 ஆகிய வார்டுகளில் பொது சுகாதார பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள், கோவிட் கட்டுப்பாட்டு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போதும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கோவிட் தொடர்பான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கும், தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளில் (ந.க.எண்.9887/2020/எ2, நாள் 10.10.2020ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு) நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பார்வை 3ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி கொசுப்புழு ஒழிப்பு சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (DBC) நாள் ஒன்றுக்கு ரூ.510/-, துப்புரவுப் பணிக்கு (Other Unskilled Menials-SWM) நாள் ஒன்றுக்கு ரூ.676/-, மற்றும் ஓட்டுநர் (Semi-Skilled Labourers-Driver) நாள் ஒன்றுக்கு ரூ.714/- என்ற தினக்கூலி அடிப்படையில் 01.04.2022 முதல் 30.06.2022 முடிய மூன்று மாத காலத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 01.07.2022 முதல் 30.09.2022 முடிய 3 மாத காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமை உள்பட 92 நாட்களுக்கு இந்த சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு துப்புரவுப்பணி, பொது சுகாதாரப்பணி மற்றும் ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டு வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1 | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 77 | 77 |
| 2 | துப்புரவுப் பணியாளர்கள் (SWM) | 140 | 140 |
| 3 | ஓட்டுநர்கள் (Drivers) | 27 | 27 |

| | | | |
|---|---|---|---|
| 1 | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 77 x 92 x 510 | 36,12,840/- |
| 2 | துப்புரவுப் பணியாளர்கள் (SWM) | 140 x 92 x 676 | 87,06,880/- |
| 3 | ஓட்டுநர்கள் (Drivers) | 27 x 92 x 714 | 17,73,576/- |

**<u>கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC)</u>**

| வ. எண் | சுயஉதவிக்குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | தினக்கூலி ரூ. | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | மல்லிகை | 13 | 510 | 92 | 6,09,960 |
| 2 | செம்பருத்தி | 13 | 510 | 92 | 6,09,960 |
| 3 | இளந்தென்றல் | 13 | 510 | 92 | 6,09,960 |
| 4 | புன்னகை | 12 | 510 | 92 | 5,63,040 |
| 5 | ஐஸ்வர்யம் | 13 | 510 | 92 | 6,09,960 |
| 6 | கொடிமலர் | 13 | 510 | 92 | 6,09,960 |
| | **மொத்தம்** | **77** | | | **36,12,840** |

## துப்புரவுப் பணியாளர்கள் (SWM)

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | சுதேசி சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 2 | அக்னி சிறகுகள் சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 3 | தொடுவானம் சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 4 | கோகுலம் சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 5 | வெண்புறா சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 6 | விடிவெள்ளி சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 7 | களஞ்சியம் சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 8 | தந்தை பெரியார் சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 9 | அறிஞர் அண்ணா சுய உதவிக்குழு | 12 | 676 | 92 | 7,46,304 |
| 10 | குறிஞ்சி சுய உதவிக்குழு | 5 | 676 | 92 | 3,10,960 |
| 11 | மருதம் சுய உதவிக்குழு | 7 | 676 | 92 | 4,35,344 |
| 12 | காமராஜர் சுய உதவிக்குழு | 10 | 676 | 92 | 6,21,920 |
| 13 | ரோஜா சுய உதவிக்குழு | 10 | 676 | 92 | 6,21,920 |
| | **மொத்தம்** | **140** | | | **87,06,880** |

## ஓட்டுநர்கள் (SWM Vehicles)

| வ. எண் | பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தாமரை சுய உதவிக்குழு | 12 | 714 | 92 | 7,88,256 |
| 2 | அல்லி சுய உதவிக்குழு | 7 | 714 | 92 | 4,59,816 |
| 3 | முல்லை சுய உதவிக்குழு | 8 | 714 | 92 | 5,25,504 |
| | **மொத்தம்** | **27** | | | **17,73,576** |

**அலுவலகக்குறிப்பு :**

மேலே தெரிவிக்கப்பட்ட விபரங்களின்படி, சுய உதவிக்குழு பணியாளர்கள் (கொசுப்புழு ஒழிப்பு (DBC) பணியாளர்கள், (SWM) துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் (Driver) ஓட்டுநர்கள்) மூலம் 01.07.2022 முதல் 30.09.2022 வரை உள்ள மூன்று மாத காலத்திற்கு (92 நாட்கள்) மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1894/2020/எச்.1**

**97. அனுமதி வழங்கப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2ற்குட்பட்ட வார்டு எண். 36 ஏ.பி.டி, விசிடிவி சாலைகள் பவானி மற்றும் சத்தி சாலையை இணைக்கும் சாலையாக உள்ளது. மேலும் பேருந்து நிலையத்திற்கு செல்லும் முக்கிய சாலையாகவும் செயல்படுகிறது. ஏ.பி.டி சாலை மற்றும் விசிடிவி சாலை பழுதடைந்து உள்ளதால் வாகன போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூராக உள்ளது. மேற்படி பழுதான சாலையை சீரமைப்பு செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.17.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்லாம்.

**ந.க.எண்.இ1/001162/2022-ம.2**

**98. அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3ல், 15–வார்டுகளிலும் மேற்கொள்ளப்படும் பொது சுகாதார பிரிவு பணிகளான கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாட்கள் இல்லை. தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கும், தற்காலிக சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் பணிகளை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9887/2020/எ2, நாள்.10.10.2020ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பார்வை–3ல் கண்டுள்ள சுற்றறிக்கையின்படி கொசுப்புழு ஒழிப்பு சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு (DBC) நாள் ஒன்றுக்கு ரூ.510/– தூய்மைப் (Other Unskilled Menials) பணிக்கு (SWM) நாள் ஒன்றுக்கு ரூ.676/– மற்றும் (Semi-Skilled Labourers) ஓட்டுநர் (Driver) பணிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.714/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.07.2022 முதல் 30.09.2022 முடிய 3மாத காலத்திற்கு 89 நாட்களுக்கு சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணி, கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் ஓட்டுநர் பணி மேற்கொள்ளவும், EPF பணியாளர்களிடம் 12% பிடித்தம் செய்யப்படும் தொகையுடன் நிர்வாகப்பங்கு தொகை 13% ஆகியவற்றை EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும் அதற்காகும் செலவினம் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் தன்மை | பணியாளர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 181 | 181 |
| 2 | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 82 | 82 |
| 3 | ஓட்டுநர்கள் (DRIVERS) | 44 | 44 |

| | | | |
|---|---|---|---|
| 1 | தூய்மைப் பணியாளர்கள் (SWM) | 181 X 89 X 676 | **10889684** |
| 2 | கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) | 82 X 89 X 510 | **3721980** |
| 3 | ஓட்டுநர்கள் (DRIVERS) | 44X 89 X 714 | **2796024** |
| மொத்தம் | | | **17407688** |

**தூய்மைப்பணியாளர்கள் (SWM)**

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஆதியோகி ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 2 | ஸ்ரீ விநாயகா ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 3 | பழனிமுருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 | 676 | 89 | **721968** |
| 4 | அப்துல்கலாம் ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 5 | ஸ்ரீ ஆஞ்சநேயா ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 6 | ஸ்ரீ அம்மன் ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 7 | ஸ்ரீ ராஜலட்சுமி ஆடவர் சுயஉதவிக்குழு | 13 | 676 | 89 | **782132** |
| 8 | ஸ்ரீ கன்னிமார் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 | 676 | 89 | **721968** |
| 9 | தாமரை ஆடவர் சுயஉதவிக்குழு | 11 | 676 | 89 | **661804** |
| 10 | ரோஜா ஆடவர் சுயஉதவிக்குழு | 11 | 676 | 89 | **661804** |
| 11 | தென்றல் ஆடவர் சுயஉதவிக்குழு | 12 | 676 | 89 | **721968** |
| 12 | தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 15 | 676 | 89 | **902460** |
| 13 | ஸ்ரீ ஆறுபடையப்பா மகளிர் சுயஉதவிக்குழு | 15 | 676 | 89 | **902460** |
| 14 | ரோஜா இதழ் மகளிர் சுயஉதவிக்குழு | 15 | 676 | 89 | **902460** |
| **மொத்தம்** | | **181** | **676** | **89** | **10889684** |

**கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC)**

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திண்டல் பாலமுருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 10 | 510 | 89 | **453900** |
| 2 | ஜெகத் முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 11 | 510 | 89 | **499290** |
| 3 | மலைக்கோவில் முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 11 | 510 | 89 | **499290** |
| 4 | ஸ்ரீ பாலமுருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 9 | 510 | 89 | **408510** |
| 5 | வலசு முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 11 | 510 | 89 | **499290** |
| 6 | திண்டல் முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 10 | 510 | 89 | **453900** |
| 7 | ஸ்ரீ முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 10 | 510 | 89 | **453900** |
| 8 | ஸ்ரீ வள்ளி முருகன் ஆடவர் சுயஉதவிக்குழு | 10 | 510 | 89 | **453900** |
| **மொத்தம்** | | **82** | **510** | **89** | **3721980** |

**ஓட்டுநர்கள் (SWM Vehicles)**

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | அத்திவரதர் ஆடவர் சுயஉதவிக்குழு | 18 | 714 | 89 | 1143828 |
| 2 | சந்திராயன் ஆடவர் சுயஉதவிக்குழு | 19 | 714 | 89 | 1207374 |
| 3 | மகாத்மா காந்தி ஆடவர் சுயஉதவிக்குழு | 7 | 714 | 89 | 444822 |
| **மொத்தம்** | | **44** | **714** | **89** | **2796024** |

மேற்படி ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் பணிபுரிந்துவரும் ஓட்டுநர் குழுவில் கடந்த **30.06.2022** வரை **43** குழு ஓட்டுநர்கள் மாமன்ற அனுமதியுடன் பணியில் ஈடுபட்டுவந்தனர். தற்போது குடிநீர் வழங்கும் பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி **20.06.2022** அன்று பெறப்பட்டு ஒரு ஓட்டுநர் பணி ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள மகாத்மா காந்தி ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் பெற்று

01.07.2022 முதல் பணிக்கு பயன்படுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மொத்த ஓட்டுநர்கள் 44 நபர்களுக்கு 01.07.2022 முதல் 30.09.2022 வரையிலான காலங்களில் 89 நாட்களுக்கு ஊதியம் வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் உத்தரவு ந.க.எண்.9887/2020/எ2 நாள்.10.10.2020–ன்படி துப்புரவு பணியாளர்களுக்கு ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர்–2022 ஆகிய மூன்று மாதத்திற்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.எச்1/2200/2020-ம.3**

**99. அனுமதி வழங்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–II-க்குட்பட்ட வார்டு எண்.5,8,9,11,12,18,20,21, 22,27,28,29,35,36,37வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய் திறப்பு பணிகள் மற்றும் பொறியியற் பிரிவு பணிகள் ஆகிய பணிகள் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சுய உதவிக்குழுக்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9887/2020/எ2, நாள்.10.10.2020ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948ன் படி தினக்கூலி பணியாளர்கள் / பகுதி நேரப்பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க பிறப்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி நாள் ஒன்றுக்கு ரூ.676/– என்ற தினக்கூலி அடிப்படையில் 01.07.2022 முதல் 30.09.2022 (ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர்) வரையிலான 3 மாதங்களுக்கான 89 நாட்களுக்கு கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு

பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவும், பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்படும் 12% EPF தொகையுடன் நிர்வாகப்பங்கு தொகை 13% ஆகியவற்றை EPF அலுவலகத்திற்கு செலுத்திடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.32,42,036/-ஐ மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குழுவின் பெயர் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | மொத்த நாட்கள் | வழங்கப்பட வேண்டிய ஊதியம் | EPF 13% | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வானவில் மகளிர் சுயஉதவிக்குழு | 13 நபர்கள் | ரூ.676/- | 89 | 782132/- | 78,000/- | 8,60,132/- |
